மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 29 ம் நாள் புதன்கிழமை
இடைநிலை மனு எண்.03/2026
இன்
அசல் வழக்கு எண்.73/2025
––––––

கா. சங்கர் .. மனுதாரர்/வாதி

/எதிர்/

1. தனலெட்சுமி
2. வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர்
3. வருவாய் வட்டாட்சியர், சாத்தூர்
4. தமிழ்நாடு அரசு
அதன் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மூலம் .. 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்
5. காயாம்பு .. 2 முதல் 5 உத்தேச பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 08.07.2026 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. கணபதிராமன், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சசிக்குமார், அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. சி. முனீஸ்வரன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களால் இம்மனுவில் கண்ட 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்த்து உத்தரவிட வேண்டி கட்டளை 1 விதி 10(2) உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கை 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருந்து வருகின்ற நிலையில், ஷை தபசில் சொத்துக்கு மனுதாரரது பெயரில் இருந்து வருகின்ற பட்டாவை ரத்து செய்ய வேண்டி 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரரிடம் மனு தாக்கல் செய்துள்ளார். வழக்கு தபசில் சொத்து தொடர்பாக உரிமை பிரச்சனை உட்பட அனைத்து பிரச்சனைகளையும் நிலுவையில் உள்ள அசல் வழக்கில் தான் தீர்க்க முடியும். இந்நிலையில், மனுதாரரது பெயரிலுள்ள பட்டாவை ரத்து செய்யும் நடவடிக்கையை 2ம் எதிர்மனுதாரர் எடுத்து வருவது வழக்கில் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தும்.

2.2. மேலும் உரிமை பிரச்சனை இருந்து வருவதால் அதனைக் குறித்து முடிவு செய்ய அதிகாரம் 2ம் எதிர்மனுதாரருக்கு இல்லை. மேலும் 3ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு பட்டா வழங்கியுள்ளார். அசல் வழக்கில் உரிமை பிரச்சனை உட்பட அனைத்து பிரச்சனைக்கும் தீர்வு காணமுடியும் என்பதால் 2, 3 எதிர்மனுதாரர்களையும் அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து அசல் வழக்கை மேல் நடத்த வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. 2, 3 எதிர்மனுதாரர்கள் அரசு அலுவலர்களாக இருப்பதால் 4ம் எதிர்மனுதாரரையும் அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. அசல் வழக்கில் உள்ள பிரச்சனைகளை தீர்ப்பதற்கு 2 , 3 எதிர்மனுதாரர்கள் தேவையான தரப்பினர்களாக உள்ளனர்.

2.3. மேற்படி தேவையான தரப்பினர்களையும் அசல் வழக்கில் 2, 3 பிரதிவாதிகளாக சேர்த்து அசல் வழக்கை மேல் நடத்தினால் அசல் வழக்கில் ஒரு சிறந்த முடிவை எடுக்க முடியும். தேவையற்ற குழப்பங்கள் தவிர்க்க முடியும். பல வழக்குகள் எழுவதை தவிர்க்க முடியும். ஆகவே 2, 3 எதிர்மனுதாரர்களை அசல்

வழக்கில் 2, 3 எதிர்மனுதாரர்களாக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. மேலும் தபசில் சொத்துக்களுக்கு பட்டா மனுதாரரது தகப்பனாரான 5ம் எதிர்மனுதாரர் காயாம்பு பெயரில் இருந்து வந்துள்ளது. ஷை 5ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு தபசில் சொத்துக்களை 07.04.2025ம் தேதி தகுந்த பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும், தபசில் சொத்தை 5ம் எதிர்மனுதாரர் காயாம்பு மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். ஆகவே வழக்கிலுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு 5ம் எதிர்மனுதாரர் அவசிய தரப்பினர் ஆவார். 5ம் எதிர்மனுதாரரையும் அசல் வழக்கில் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. அவ்வாறு தரப்பினராக சேர்த்து வழக்கை விசாரித்தால் உண்மை சங்கதிகளை கண்டறிந்து அசல் வழக்கில் சிறந்த முடிவை எடுக்க முடியும். எனவே இம்மனுவில் கண்ட 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாது போனால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் எற்பட்டுவிடும். எனவே மனு தாக்கல்.

3. **<u>1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்–</u>**

**3.1.** இதனடியில் ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்றவை முற்றிலும் மறுக்கப்படுகிறது. அசல் வழக்கின் விசாரணையினை காலதாமதப்படுத்து வதற்காகவும், தாவா அசல் வழக்கில் மனுதாரர்/வாதி பெயரிலுள்ள போலி பட்டாவை ரத்து செய்யக்கோரி 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி 01.08.2025ம் தேதி சாத்தூர் வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த புகார் மனு மீது வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மனுதாரர்/வாதி பெயரிலுள்ள போலி பட்டாவை ரத்து செய்துவிடுவார் என்பதை அறிந்து வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவை தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2. தாவா அசல் வழக்கு வருவாய் கோட்டாட்சியரிடம் 1ம் எதிர்மனுதார்

01.08.2025ம் தேதி பட்டாவை ரத்து செய்ய புகார் கொடுத்த பின்பு தாவா அசல் வழக்கு 05.08.2025ம் தேதி பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா அசல் வழக்கில் தாவா வழக்கு சொத்தைப் பொறுத்தவரை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதியோ அவரது வகையாட்களோ எந்த வகையிலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டுமே கேட்டுள்ளார். அசல் வழக்கின் தாவா வழக்கு சொத்து மனுதாரர்/வாதிக்கு தனித்துப் பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரம் தாவா அசல் வழக்கில் மனுதாரர்/வாதி எதுவும் கோரவில்லை.

3.3. தற்போது அவசியமற்ற 2 முதல 5 வரையுள்ள எதிர்மனுதாரர்களை தாவா வழக்கில் சேர்க்க மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார். 2 முதல் 5 வரையுள்ள உத்தேச பிரதிவாதிகள் அசல் வழக்கில் பிரதிவாதியாக சேர்த்தால் அசல் வழக்கு விசாரணை கால விரையமாகும். இந்த உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்ப்பதால் வழக்கிற்கு எந்த பயனுமில்லை. அவசியமற்ற 2 முதல் 5 வரையுள்ள உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க கோரிய இந்த இடைக்கால மனுவினை 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**5.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**6.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. எந்த சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. <u>தீர்வு</u>**

**6.1.** மனுவில் மனுதாரர். மனுதாரர் தரப்பில் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்த்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால், மேலும் தபசில் சொத்துக்களுக்கு பட்டா மனுதாரரது தகப்பனாரான 5ம் எதிர்மனுதாரர் காயாம்பு பெயரில் இருந்து வந்துள்ளது. ஷை 5ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு தபசில்

சொத்துக்களை 07.04.2025 ம் தேதி தகுந்த பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும், தபசில் சொத்தை 5ம் எதிர்மனுதாரர் காயாம்பு மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். ஆகவே வழக்கிலுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு 5ம் எதிர்மனுதாரர் அவசிய தரப்பினர் ஆவார். 5ம் எதிர்மனுதாரரையும் அசல் வழக்கில் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. எனவே மனு தாக்கல்.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரையில், 2 முதல் 5 வரையுள்ள உத்தேச பிரதிவாதிகள் அசல் வழக்கில் பிரதிவாதியாக சேர்த்தால் அசல் வழக்கு விசாரணை கால விரையமாகும். இந்த உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கில் பிரதிவாதிகளாகசேர்ப்பதால் வழக்கிற்கு எந்த பயனுமில்லை. அவசியமற்ற 2 முதல் 5 வரையுள்ள உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க கோரிய இந்த இடைக்கால மனுவினை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** மனு பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்களை கருத்தில் கொண்டும், வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டும், வழக்கு விசாரணையை மேம்பட எடுத்துச் செல்வதற்கு இந்த மனுவை அனுமதிப்பதே நீதியின் பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>சாட்சி, சான்றாவணங்கள்</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.03/2025
இன்
அ.வ.எண்.73/2025
**உத்தரவு**
நாள்–29.07.2026.